# கொரோனா வைரஸ் விழிப்புணர்வு முகாம்



திண்டிவனம் அரசு கலைக் கல்லூரியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது.

**திண்டிவனம், பிப். 8:** திண்டிவனம் கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. வரலாற்று துணைத் தலைவர் கமலக்கண்ணன் வரவேற்றார். கல்லூரி முதல்வர் கணேசன் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் நாராயணன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளர்களாக ஒலக்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலர் மருத்துவர் செந்தில்நாதன், சாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் விஜயலட்சுமி, கிராம சுகாதார செவிலியர் விஜயா ஆகியோர் கலந்து கொண்டு கொரோனா வைரஸ் காய்ச்சல் அறிகுறிகள், தடுப்பு நடவடிக்கைகள், அதற்கான சிகிச்சைகள் குறித்து விளக்கினார்.